# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2007 / 2008
## HELD IN AUGUST - 2008

## GGY 2.12 – RESOURCES UTILIZATION AND SOCIAL GEOGRAPHY

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

### பகுதி – I

01. "உலகப் பொருளாதாரத்தை நிலைநிறுத்துவதற்கு வளப் பயன்பாடும், பாதுகாப்பும் இன்றியமையாத ஒன்றாகும்" இக்கூற்றினை நிலையான அபிவிருத்திக் கோட்பாட்டுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

02. "மனிதவள அபிவிருத்தியினூடாக பொருளாதார விருத்தி" எனும் சிந்தனையில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் போக்கினை விமர்சன ரீதியாக ஆராய்க.

03. (அ) வளங்கள் என்பதனை வரைவிலக்கனப்படுத்துக.

    (ஆ) பின்வருவனவற்றை சுருக்கமாக விளக்குக.

    i. மனித வளம்
    ii. புதுப்பிக்க முடியாத வளங்கள்
    iii. மீள்பாவனைக்கு உட்படுத்தப்படும் வளங்கள்

04. (அ) "வளங்களின் அதிகப்படியான பயன்பாட்டினால் சூழலில் பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படுகின்றன." இக்கூற்றினை நீர் ஏற்றுக்கொள்கின்றீரா? சுருக்கமாக விளக்குக.

    (ஆ) இப்பிரச்சினையைத் தீர்பதற்கான பிரதியீட்டுக் காரணிகளை முன்வைக்குக.

### பகுதி – II

05. (அ) உலகின் உயர்தர மீன்பிடி வலயங்கள் என கருதப்படுகின்றவற்றை சுருக்கமாக விளக்குக.

    (ஆ) இவ்வலயங்களின் அண்மைக்கால மீன்பிடிக் கைத்தொழில் போக்கினை பொருத்தமான உதாரணங்கள் கொண்டு விளக்குக.

06. (அ) குடியிருப்புக்களை அவற்றின் தொழிற்பாட்டிற்கு ஏற்ப வகைப்படுத்துக.

    (ஆ) இவைகளில் ஏதாவது ஒரு குடியிருப்பினை தெரிவு செய்து அது வளர்ச்சியடைவதற்கு சாதகமான காரணிகளை ஆராய்க.

07. கனிய எண்ணெய் வளமுடைய நாடுகள் என்று அழைக்கப்படுகின்ற நாடுகள் 'எண்ணெய்ப் பராமரிப்பினை' எந்த அளவிற்குப் பேணுகின்றன என்பதனை ஆராய்க.

08. பின்வருவனவற்றுள் எலையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்புகள் தருக.

    i. மல்தூசின் சனத்தொகைக் கோட்பாடு
    ii. தரைநீர் வளம்
    iii. கனிப்பொருள் உற்பத்திகள்
    iv. பௌதீக வளங்களின் முகாமை

***